இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை – 2009

**ESP 2269 – ஆரம்பமட்டத்தில் தமிழ்மொழி கற்பித்தல்**

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 10.07.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) 'செவிமடுத்தல் திறன் ஏனைய மொழிசார்ந்த அடிப்படைத்திறன் விருத்திக்கு இன்றியமையாததாகும்.' விளக்குக. (09 புள்ளிகள்)

   (ii) கிரகித்தலுக்காக செவிமடுத்தல், இரசனைக்காக செவிமடுத்தல் என்பவற்றை மதிப்பிட வகுப்பறைகளில் வழங்கக்கூடிய செயற்பாடுகள் ஒவ்வொன்றினை விபரிக்க. (12 புள்ளிகள்)

   (iii) முதன்மைநிலை மூன்றில் கேட்டல்திறன் விருத்திக்கு வழங்கக்கூடிய முக்கியத்துவம் தொடர்பாக விபரிக்க. (12 புள்ளிகள்)

2. (i) "ஒரு பிள்ளையின் மொழிவிருத்திக்கும் தொடர்பாடல் விருத்திக்கும் பேச்சுத்திறன் இன்றியமையாதது" விபரிக்க. (09 புள்ளிகள்)

   (ii) ஆரம்பவகுப்பு மாணவர்களின் பேச்சாற்றல் விருத்திக்கு நீங்கள் வகுப்பறையில் வழங்கக்கூடிய செயற்பாடு ஒன்றுபற்றி விபரிக்க. அச் செயற்பாட்டுக்கான புள்ளி வழங்கும் திட்டம் ஒன்றைத் தயாரிக்க. (12 புள்ளிகள்)

   (iii) முதன்மைநிலை இரண்டில் பேச்சாற்றல் விருத்தியில் ஆசிரியர், பெற்றோரின் வகிபங்கினை விபரிக்க. (12 புள்ளிகள்)

3. (i) கிரகித்தலுக்காக வாசித்தல், நயத்தலுக்காக வாசித்தல், தரவு சேகரிப்பதற்காக வாசித்தல் என்ற எண்ணக்கருக்களை விளக்குக. (09 புள்ளிகள்)

   (ii) ஆரம்பவகுப்பு மாணவருக்கான வாசிப்புச் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை வகுப்பறையில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர்களென விபரிக்க. (12 புள்ளிகள்)

   (iii) 'ஆரம்பவகுப்பு மாணவர்களது மொழிவளத்தை விருத்திசெய்ய வாசிப்பு இன்றியமையாதது' இக்கூற்றுத் தொடர்பாக உங்கள் கருத்துக்களை முன்வைக்க. (12 புள்ளிகள்)

4. (i) எழுத்துப் பொறிமுறைத்திறன்களைப் பட்டியற்படுத்தி எழுத்துப் பொறிமுறைத்திறன் விருத்திக்கு முதன்மைநிலை ஒன்றில் வழங்கக்கூடிய முன்பயிற்சிகள் பற்றி விளக்குக. (09 புள்ளிகள்)

(ii) எழுத்தாக்கத்திறன் விருத்திக்கு வழங்கக்கூடிய செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை வகுப்பறையில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர்கள் என்பதை விளக்குக (12 புள்ளிகள்)

(iii) எழுத்துத்திறன் விருத்தியில் இடர்ப்பாடு கொண்ட மாணவர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விபரிக்க. (12 புள்ளிகள்)

5. (i) 'கற்பித்தல் நுட்பங்கள் கற்றலை மேம்படுத்தும்' மொழி கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டு இக் கூற்றினை விரித்துரைக்க.

(ii) ஆரம்பவகுப்பு மாணவருக்கு மொழி கற்பித்தலுக்கு உதவக்கூடிய கற்பித்தல் துணைச்சாதனங்கள் மூன்றைக் குறிப்பிட்டு, அவற்றை எத்தகைய சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவீர்கள் என்பதை விபரிக்க.

(iii) 'மொழி தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மாணவர்களது ஆளுமையை மேம்படுத்துகின்றன' இக்கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு விடை எழுதுக.

(i) கல்வி உளவியல் பற்றிய அறிவு ஆரம்ப வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாகும்.

(ii) உச்சரிப்புத்திறன் விருத்திக்கு மொழி ஆய்வுகூடத்தின் முக்கியத்துவம் பற்றி விபரிக்க.

(iii) ஆரம்ப வகுப்பு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் பாத்திரமேற்று நடித்தலின் முக்கியத்துவம்.

(iv) கற்றல் கற்பித்தலில் கணிப்பீட்டின் முக்கியத்துவம்.

பதிப்புரிமை பெற்றது)